# முதல் திருப்புதல் தேர்வு
# ஜனவரி – 2025
# பத்தாம் வகுப்பு தமிழ்

**கால அளவு: 15 நிமிடங்கள்+ 3 மணிநேரம்** **மொத்த மதிப்பெண்கள் : 100**

## பகுதி - I
## (மதிப்பெண்கள் - 15)

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும். 15×1=15
(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்-
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+ தமிழ்+நா
2. "வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
ஆயுள் பெருக்கம் உண்டாம்" - எனப் பாடியவர்,
அ) தொல்காப்பியர் ஆ)திருமூலர் இ)ஔவையார்
ஈ)பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்
3. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ)வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
4. ' பெப்பர்' என்ற இயந்திர மனிதனை உருவாக்கிய நாடு,
அ) அமெரிக்கா ஆ) சீனா இ) ஜப்பான் ஈ) இரஷ்யா
5. அறுந்துணை என்பதைப் பிரித்தால் -------------
அ) அருமை + துணை ஆ)அரு+ துணை இ)அருமை + இணை ஈ)அரு+ இணை
6. குண்டலமும் குழைகாதும், ஆடுக. - இச்சொற்களுக்கான இலக்கணக்குறிப்பைக் கண்டறிக.
அ) எண்ணும்மை, வினையெச்சம் ஆ) எண்ணும்மை, வியங்கோள் வினைமுற்று.
இ) முற்றும்மை, வினையெச்சம் ஈ)உம்மைத்தொகை, வியங்கோள் வினைமுற்று.
7. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா. போ. சி கருதியது-----------
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
8. 'சிலம்புச் செல்வர்' என்று போற்றப்படுபவர்,
அ) ம.பொ. சிவஞானம் ஆ) மார்ஷல் நேசமணி
இ) மங்கலங்கிழார் ஈ ) ம.சங்கரலிங்கம்
9. மேன்மை தரும் அறம் என்பது-------
அ)கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ)மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது.
10. கூற்று 1: போராட்ட பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.
கூற்று 2: அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.
அ) கூற்று 1: சரி 2 தவறு ஆ)கூற்று 1மற்றும் 2 தவறு
இ) கூற்று 1தவறு 2சரி ஈ) கூற்று 1மற்றும் 2சரி
11. 'வேருக்கு நீர்' என்ற நூலின் ஆசிரியர்
அ) ந. முத்துச்சாமி ஆ) இராஜம் கிருஷ்ணன் இ) சுரதா ஈ) வல்லிக்கண்ணன்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு(12,13,14,15) விடை தருக.**

"காற்றே வா"
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன்வா
இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண - ரசத்தை எங்களுக்குக் கொண்டு கொடு"

12. ' மயலுறுத்து' என்பதன் பொருள்:
அ) விளங்கச் செய் ஆ) மயங்கச் செய் இ)அடங்கச் செய் ஈ) சீராக

13. ப்ராண ரஸம் - பொருள் தருக.
அ) உயிர்வளி ஆ) கார்பன் -டை - ஆக்ஸைடு
இ) ஹைட்ரோ கார்பன் ஈ)கந்தக - டை - ஆக்ஸைடு

14. ' மிகுந்த' - இலக்கணக் குறிப்பு தருக
அ) வினையெச்சம் ஆ)முற்றெச்சம் இ)பெயரெச்சம் ஈ)வினைத்தொகை

15. நீரலைகளின் - பிரித்தெழுதுக.
அ) நீர் +அலைகளின் ஆ)நீரின் + அலைகளின் இ) நீரலை+களின் ஈ) நீர+அலைகளின்

**பகுதி - II ( மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு - 1**

**குறிப்பு :** எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 21 -வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4×2=8

16. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா.இளங்குமரனார்.
ஆ)உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.

18. குறிப்பு வரைக-" சதாவதானம்'.

19. பாசவர் ,வாசவர், பல்நிண விலைஞர்,உமணர்- சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

20. குறிப்பு வரைக- அவையம்.

21. "முயற்சி ' - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு -2**

**குறிப்பு :** எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10

22. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

23.பழமொழிகளை நிறைவு செய்க.
அ). உப்பில்லாப்---------.
ஆ). விருந்தும்-------------.

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக. "பதிந்து'

25. கலைச்சொற்கள் தருக.
அ)Belief ஆ)Intellectual

**குறிப்பு** :செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.
சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
தேன் ,விளக்கு ,மழை ,விண்,மணி, விலங்கு ,செய், மேகலை ,வாள், பொன் ,பூ

26. பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.
“கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்
கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை
காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை
செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ”

27. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.
அ). மழைமுகம் காணாப் பயிர்போல
ஆ).கண்ணினைக் காக்கும் இமை போல
28. கீழ்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.
( கட்டு ,குலை) பழம், புல்.

**பகுதி--III**
**( மதிப்பெண்கள் : 18)**
**பிரிவு—1**

**குறிப்பு :** எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6

29. **தமிழ் மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்து கொண்ட இரண்டினை எழுதுக.**
30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயரும் உண்டு. மேற்கிலிருந்து வீசும்போது நான் கோடை எனப்படுகிறேன். மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன். வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக் காற்றாகிறேன். வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும்போது நான் வாடைக் காற்று எனப்படுகிறேன். நான் பனிப் பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக் காற்று எனவும் அழைக்கப்படுகிறேன்.

அ). ஊதைக் காற்று என்று அழைப்பதேன்?
ஆ). வாடை என்பது எத்திசையைக் குறிக்கிறது?
இ). இப்பகுதிக்கு ஏற்ற தலைப்பினை தருக.

31. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

**பிரிவு -2**

**குறிப்பு :**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2×3=6
34 -வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. "முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப. ரா .கவி பாடுகிறார்?
33. உரைப்பாட்டு மடை (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்)- விளக்குக.
34. அ) "சிறு தாம்பு தொடுத்த" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்.

(அல்லது)

ஆ)"அருளைப் பெருக்கி" எனத் தொடங்கும் நீதி வெண்பாப் பாடல்.

**பிரிவு-3**

**குறிப்பு :**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
36. கவிஞர் தான் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.
37. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு காண்க.

**பகுதி-IV**
**(மதிப்பெண்கள் :25)**

**குறிப்பு :**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5×5=25

38. அ) இறைவன் ,புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. **(அல்லது)**

ஆ) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

39. அ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக. **(அல்லது)**

ஆ) உங்கள் ஊருக்கு போக்குவரத்து வசதி வேண்டி போக்குவரத்து துறை ஆணையருக்கு கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கவிதையாக்குக.



41. தமிழரசனின் மகன் வள்ளுவன் 45.பெரியார்நகர், மதுரை. தேர்வர் தன்னை வள்ளுவனாக நினைத்து நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை.... அட்டவணைப் படுத்துக.

**(அல்லது)**

ஆ) மொழிபெயர்க்க

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

**குறிப்பு: செவிமாற்று திறனாளர்களுக்கான மாற்று வினா.**

உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

1. பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
5. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

## பகுதி - V

**( மதிப்பெண்கள்:24)**

**குறிப்பு :** அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். 3×8=24

43.அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) சிலப்பதிகார மருர்வூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

44.அ) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) ' அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக

45. அ) 'விசும்பின் துளியும் பசும்புல் தலையும்' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.

**குறிப்புகள்:** முன்னுரை - இயற்கையோடு இயைந்து வாழ்வோம் - வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் - மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் – முடிவுரை.

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு ஒன்றும் தருக.

**குறிப்பு:** முன்னுரை - மனித வாழ்வு அறம் சார்ந்தது - இலக்கியம் காட்டும் அறம் - அறத்தான் வருவதே இன்பம் - முடிவுரை.

முதல் திருப்புதல் தேர்வு -2025 தஞ்சாவூர் மாவட்டம்

10 ஆம் வகுப்பு - தமிழ் விடைக்குறிப்புகள்

1) இ. எம் + தமிழ் + நா

2) இ. ஔவையார்

3) ஈ. வானத்தையும் பேரொலியையும்

4) இ. ஜப்பான்

5) அ. அருமை+ துணை

6) ஆ. எண்ணும்மை, வியங்கோள் வினைமுற்று

7) ஈ. சிலப்பதிகாரம்

8) அ. ம.பொ.சிவஞானம்

9) அ. கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

10) ஈ. கூற்று 1 மற்றும் 2 சரி

11) ஆ. இராஜம் கிருஷ்ணன்

12) ஆ. மயங்கச் செய்

13) அ. உயிர்வளி

14) இ. பெயரெச்சம்

15) நீர் + அலைகளின்

16) 1- பெட்ரோல் நிலையங்கள்

2- போக்குவரத்து ஊர்திகள் மற்றும் பல

17) அ. சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார் ?

ஆ. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது ?

18) சதம் + அவதானம் , சதம் என்றால் நூறு, அவதானம் - செயல்கள். ஒரே நேரத்தில் நூறு செயல்களைச் செய்வதே சதாவதானம்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

19) வெற்றிலை விற்பவர், நறுமணப்பொருள்கள் விற்பவர், இறைச்சி விற்பவர், உப்பு விற்பவர்.

20) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிவன. அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு.

21) முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும்.

22) தம்பி அழாதே ! நான் இருக்கிறேன். அப்பா நமக்குத் தின்பண்டங்கள் வாங்கி வருவார்.

23) அ. பண்டம் குப்பையிலே

ஆ. மருந்தும் மூன்று நாளைக்கு

24) பதி+ த் ( ந்) + த்+ உ

பதி - பகுதி, த்- சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ- வினையெச்ச விகுதி

25) அ.நம்பிக்கை ஆ. அறிவாளர்

26) கம்பர் , உமறுப்புலவர், ஜவ்வாது புலவர், காசிம்.புலவர், குணங்குடி மஸ்தான் சாகிபு,

27) அ. நீண்ட நாளாக தாயைக் காணாத சேய் மழைமுகம் காணாப் பயிர்போல வாடினான்.

ஆ. தாய் தன் குழந்தையைக் கண்ணினைக் காக்கும் இமைபோல பாதுகாத்தாள்.

28) புல்- கட்டு, பழக்குலை

29) 2010 ஆம் ஆண்டு கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை நடத்தி, அதில் தமிழ் நூல்கள் பலவற்றை வெளியிட்டார்.

திருக்குறளுக்கு உரை எழுதிக் குறளோவியம் என்று நூலாக வெளியிட்டார். மனோன்மணியம் சுந்தரனார் பாடலை அரசு விழாக்களில் தொடக்கப் பாடலாகப் பாட வழி வகுத்தார்.

30) அ.பனிப் பகுதியிலிருந்து வீசுவதால் ஊதைக்காற்று என்று பெயர்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

. ஆ. வடக்கு

இ. காற்று

31). இன்றைய அறிவியல் வாழ்வில் அனைத்திலும் நிறைந்து மனிதனை மேம்படுத்துகின்றன.அறிவியலால் மனிதனால் செய்ய முடியாத கடின செயல்களை எளிதாக முடிக்கமுடிகிறது. எதிர்காலத்தில் மனித இனத்தை நோய் அழிவிலிருந்து காக்க ஆய்வுகள் நடைபெறுகின்றன.

32) மண் பதமாகியது. உழவர்கள் மகிழ்ச்சியாக ஏர்பூட்டி உழவு செய்ய தயாராகினர். மண்ணை மேலும் வளமாக்கினர்.

33) இக்காலத்தில் உரைப்பாட்டு மடையை வசனக் கவிதை என்கிறோம். வாய்க்காலில் பாயும் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது மடை. 'உரை' என்பது என்பது பேசும் மொழியின் ஓட்டம். இதனைப் பாட்டு செய்யுள் வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை.

34) அ. சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்

உறுதுயர் அலமரல் நோக் கி, ஆய்மக ள்

நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய

கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர

இன்னே வருகுவர், தாயர்"

35) அகவலோசை கொண்டது.

எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் (அளவடி) பெற்றுவரும்.

இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும்.

ஆசிரியத்தளை மிகுந்தும் பிற தளை கலந்தும் வரும்.

36) இயல்பாக நடக்கும் ஒரு நிகழ்வின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றுவதாகும்

எ.கா: "போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொட

வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட" - சிலப்பதிகாரம்

விளக்கம்: கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகரத்திற்குள் நுழைய முற்படும்போது இயல்பாகக் காற்றிலாடும் தோரண வாயிற் கொடிகளைக் கவிஞர் தம் கற்பனையினால் கோவலன் மதுரையில் கொல்லப்படுவான் என்று

முன்னமே அறிந்து வர வேண்டாம் என அக்கொடிகள் எச்சரிப்பதாகக் குறிப்பேற்றிக் கூறுவார்.

37) ஒழுக்கத்தின் - நிரை, நேர், நேர் . - புளிமாங்காய்

எய்துவர் - நேர், நிரை - கூவிளம்

மேன்மை - நேர், நேர். - தேமா

இழுக்கத்தின் - நிரை, நேர், நேர் - புளிமாங்காய்

எய்துவர் - நேர், நிரை - கூவிளம்

எய்தாப் - நேர், நேர். - தேமா

பழி. - நிரை - மலர்.

38) அ. இறைவன் : கபிலருக்காகவும் இடைக்காடனாருக்காகவும், இந்தக் கோவிலை விட்டுச் செல்கின்றேன். (இறைவன் கோவிலை விட்டு வெளியேறல்)குலேசபாண்டியன் : இறைவனே! என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? வேதங்களைப் பயின்றவர் நல்லொழுக்கத்தில் தவறினாரா? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியேன்.

இடைக்காடனாரின் புலமையை அவமதித்தல் : வேப்பமாலை அணிந்த குலேசபாண்டியன் மிகுந்த கல்வியறிவு உடையவன். தமிழறியும் பெருமான், அடியார்க்கு நல்நிதி போன்றவன், பொருட்செல்வமும் கல்விச் செல்வமும் உடையவன் என்று கேட்டுணர்ந்து தாங்கள் முன் சுவை நிரம்பிய கவிதை பாடினார் இடைக்காடனார். பாண்டியன் சிறிதேனும் பாடலைப் பொருட்படுத்தாமல் புலவரின் புலமையை அவமதித்தான்.

மன்னன் இடைக்காடனாருக்குப் பெருமை செய்தல் :

மன்னனின் மாளிகை வாழை, சாமரை இவற்றாலான விதானமும் விளக்கும் உடையது. பூரண கும்பம் மாலை, கொடி இவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது. புலவர்கள் சூழ இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் அமர்த்தினான்.

மன்னன் புலவரிடம் வேண்டுதல் :

மன்னன் புலவர்களிடம், தான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றான். புலவர்களும், நீர் கூறிய அமுதம் போன்ற சொல்லால் எங்கள் சினம் தணிந்துவிட்டது என்றனர்

ஆ)

திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின . இடையில் அரைஞாண் மணியோடு ஒளி வீசுகின்ற அரைவட்டங்கள் ஆடின.

பசும்பொன்னென ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடியது. பட்டம் கட்டிய நெற்றியில் பொட்டுடன் வட்டவடிவமான சுட்டி பதிந்தாடியது. கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் கொலைகளும் அசைந்தாடின. உச்சிக் கொண்டையும் அதிலுள்ள முத்துக்களும் ஆடின . வைத்தியநாதபுரியில் எழுந்தருளியுள்ள முருகனே! இவற்றுடன் அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட , செங்கீரை ஆடி அருளினான் எனக் குமரகுருபரர் வர்ணித்துள்ளார்.

39) உறவினருக்கு மடல்

அன்புள்ள மாமாவிற்கு கவின் எழுதுவது,

நலம். நலம் அறிய ஆவல். நான் இன்று மிக்க மகிழ்ச்சியில் இருக்கிறேன். ஏன் தெரியுமா? நேற்று வகுப்பு முடிந்து வெளியே வந்து கொண்டிருந்தேன். அப்போது பள்ளித்திடலில் ஒரு பணப்பை கிடந்தது. அதில் அதிகமான பணம் இருந்தது. ஒரு நிமிடம் பயம்! ஐயோ! இவ்வளவு பணம் இருக்கிறதே. பையை எடுத்துக் கொண்டு தலைமை ஆசிரியரிடம் சென்றேன். அவர் அலுவலக ஊழியர் கட்டணம் வசூலித்த பணம் இருசக்கர வாகனத்தில் எடுத்துச் செல்லும்போது தவற விட்டுவிட்டார் என்றார். தலைமை ஆசிரியர் மிகவும் மகிழ்ந்தார். என் நேர்மையையும், கண்ணியமான செயலையும் பாராட்டினார்

நன்றி,

40) பொருத்தமான கவிதை எழுதியிருப்பின் முழு மதிப்பெண்

41) பெயர். : வள்ளுவன.

தந்தை பெயர் : தமிழரசன்

பிறந்த நாள். : 16-03-2010

www.Padasalai.Net www.TrbTnpsc.com

வயது : 15

தொலைபேசி : 9443740120

முகவரி. : 45, பெரியார் நகர், மதுரை.

42) பிறருக்கு உதவினேன் - அவர்கள் இன்றும் பாராட்டுதல்.

விபத்திலிருந்து காத்தேன் - வாழ்த்து கிடைத்தது. முதலிய பல

43) அ.

மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து:

மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய தமிழ் தாய் வாழ்த்து , மேடையில் பாடுவதற்கு உரிய வகையில் அமைந்துள்ளது .மேலும் சொல் வழக்குகள், நம்பிக்கைகள், வரலாற்று உணர்வுகளை உள்வாங்கிப் பாடியுள்ளார் .தமிழ்த்தாய் , நீராலான கடலை ஆடையாக உடுத்தி , பாரத கண்டத்தை அழகிய முகமாகவும் , தக்கணத்தை நெற்றியாகவும் , நெற்றியில் வைக்கும் வாசனை மிகுந்த பொட்டு பொட்டு தமிழகம் ஆகவும் உள்ளது . பொட்டின் மணம் எல்லா இடங்களிலும் பரவுவதை போல தமிழ்த்தாயும் எல்லா திசைகளிலும் புகழ்பெற்று திகழ்கிறாள் .

தமிழன்னை இன்றளவும் எத்திசையும் புகழ்மணக்க இளமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள் . இதனையே "சீரிளமைத் திறம்வியந்து " எனப் பாராட்டி தமிழ் ஆகிய பெண்ணே , தாயே! உன்னை வாழ்த்துகிறேன் ! நீ வாழ்க! என்கிறார் மனோன்மணீயம் சுந்தரனார் .

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து :

பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழன்னையை அன்னை மொழியே! அழகான செந்தமிழே ! முன்னைக்கும் முன்னையான நறுங்கனியே ! கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் அரசாண்ட மண்ணுலகப் பேரரசே ! என்கிறார். பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெருமைக்குரியவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! நினைவுகளால் தலை பணிந்து வாழ்த்துகின்றோம் எனக் குறிப்பிடுகின்றார் .

தனித்தமிழின் பெருமை :

செந்தமிழே! எமக்குயிரே! நின் பெருமைகளை என்னுடைய தமிழ் நாக்கு எவ்வாறு விரித்துரைக்கும் ? பெருமையும் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே! உன்னை உரைத்த புகழுரையும் எனக்கு பற்று உணர்வை

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

எழுப்புகின்றன . வண்டானது செந்தாமரை தேனைக் குடித்து சிரகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னை சுவைத்து உள்ளத்தில் கனல் மூல உன் பெருமையை எங்கும் வழங்குகின்றோம் பெருஞ்சித்திரனார் கூறுகிறார் .

44) பொருத்தமான கற்பனை கதை

45) முன்னுரை

இருப்போரின் வாழ்வு இல்லாதோர்க்கு ஈவதாலேயே சிறக்கும். அறமும் மறமும் போற்றி வளர்த்த மரபில் வந்தவர்கள் தமிழர்கள். எளிய உயிர்கள்பால் இரக்கம் கொள்வதே உயர்ந்த மனிதப்பண்பு. அதனால்தான் ஔவையார் தம் ஆத்திசூடியில் முதல் வரியாக அறம் செய விரும்பு என்றார். அறமும் மனித வாழ்வும் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

மனித வாழ்வு அறம் சார்ந்தது

நம் முன்னோர் மனித வாழ்வை அகம், புறம் என இருவகையாற் பிரித்தனர். புறம் முழுவதும் போர், புகழ், கொடை, வீரம் பாடியது. அகம் முழுவதும் மனத்தான் நிகழ்வது என்பது நாம் அறிந்ததே.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்ப தில்லாயின் நன்று – என்கிறார் வள்ளுவர். இல்வாழ்வின் பொருளே அறம் என வலியுறுத்துவதிலிருந்தே மனித வாழ்வோடு அறம் எவ்வாறு பின்னிப்பிணைந்துள்ளது எனத் தெரிகிறது.

இலக்கியம் காட்டும் அறம் ,:

தமிழரின் தாய்ப்பாலாய் விளங்கும் முப்பால் அறம், பொருள், இன்பம் பற்றிப் பாடப்பட்டது. அறநூல்கள் மனிதனை நல்வழிப்படுத்தவே எழுதப்பட்டன. கொடையும் தயையும் பிறவிக்குணம் என்கிறார் ஔவையார். அவருக்கு நெல்லிக்கனி ஈந்த அதியனோடு சேர்த்து ஏழு வள்ளல்கள் பாரி, ஓரி, காரி, ஆய், நள்ளி, பேகன் என நாம் அறிவோம். இரந்து வந்த புலவனுக்குத் தன் தலையையே கொடுக்க வந்த குமண வள்ளலைப் புறநானூறு போற்றுகிறது. ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே என்ற புறநானூற்றுப் பாடலில் ஒவ்வொருவரும் அவரவர்தம் கடமைகளைச் சரிவரச் செய்வதே அறம் என்கிறார்

முடிவுரை

மனம், புத்தி, சித்தம் ஆகிய அகநிலை உறுப்புகளை அன்பில் தோயச் செய்து யார்மாட்டும் அன்புடையராய் வாழ்வதே அறம் ஆகும். வாழும் உயிர்க்கு அறத்தை விட நன்மையாவது ஏதுமில்லை என்கிறது குறள்.

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்,

பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் )

பாணாதுறை மேனிலைப்பள்ளி,

கும்பகோணம்

தொடர்புக்கு -9443740120.